INSTITUTE FOR HEALTH POLICY

**72, Park Street, Colombo 2, Sri Lanka**
Tel: +94 11 231 4041/2/3/5   Fax: +94 11 231 4040
e-mail: info@ihp.lk  web: www.ihp.lk  twitter: @ihplk

## PRESS RELEASE

**திகதி வரை தடையாணை**

திகதி : 30 June 2023
நேரம் : 12:01 AM Sri Lanka Time

**மேலும் தகவல்களுக்கு அணுகவும்**

டல்ரீன் பாத்லாட்
மின்னஞ்சல்: dalreen `at' ihp.lk


**பிரதான ஆராய்ச்சியாளருடன் தொடர்புகொள்ள**

மருத்துவர். ரவி ரன்னன்-எலிய
மின்னஞ்சல் : ravi `at' ihp.lk  Twitter: @ravirannaneliya


# என்.பி.பி./ஜே.வி.பி. ஆதரவு 23% ற்கு விழுந்து, 26% உடைய எஸ்.ஜே.பி. இன் பின் இருக்கும் அதே சமயத்தில், மே 2023ல் வாக்காளர்களிடையே யூ.என்.பி. மற்றும் எஸ்.எல்.பி.பி.க்கான ஆதரவு கூடியது

## *IHP MRP மே 2023 பொது தேர்தல் வாக்காளர் தீர்மானம் புதுப்பிப்பு*

சமீபத்திய மே 2023 இலங்கை கருத்துக்கணிப்பின்படி (SLOTS), என்.பி.பி./ஜே.வி.பி.க்கு வாக்களிக்கக்கூடியவர்களின் ஆதரவு ஏப்ரல் மாதத்தில் 30%ல் இருந்து மே மாதம் 23% கு விழுந்தது. எஸ்.ஜே.பி.க்கான ஆதரவும் 4 புள்ளிகள் குறைந்து 26% கு விழுந்தது. யூ.என்.பி. மற்றும் எஸ்.எல்.பி.பி. யின் பங்கு தலா 4 புள்ளிகள் உயர்ந்து இவர்களின் ஆதரவு முறையே 13% மற்றும் 10% என அதிகரித்தது.




யூ.என்.பி. மற்றும் எஸ்.எல்.பி.பி.க்கான ஆதரவு மார்ச் 2023 – மே 2023 கு இடையே உயர்ந்ததையும், அதே சமயம் என்.பி.பி./ஜே.வி.பி. இன் ஆதரவு பிப்ரவரி 2023 இல் 41% உடன் உச்சத்தை அடைந்தபின் சரிந்ததையும் போக்குகள் காட்டுகின்றன. எஸ்.ஜே.பி.க்கான ஆதரவு மே 2023ல் சற்று சரிந்தது. எனினும் அக்டோபர் 2022 முதல் 25 – 30% ற்கிடையே ஊசலாடினாலும் அவர்களுக்கான ஆதரவு ஓரளவிற்கு நிலையாக இருக்கின்றது.




### முன்வந்த அறிக்கைகள் ihp.lk வில் கிடைக்கும்


Institute for Health Policy, February 2023, “IHP MRP Voting Intentions Estimates January 2023. NPP/JVP and SJB running neck-and-neck amongst voters, but no party dominates”, SLOTS Report #2023-03.
*Available at: https://ihp.lk/publications/docs/SLOTSReport202303.pdf*

Institute for Health Policy, March 2023, "IHP MRP Voting Intentions Estimates February 2023. Voters consolidate around the NPP/JVP, SJB and ITAK, with NPP/JVP taking a clear lead", SLOTS Report #2023-06.
*Available at: https://ihp.lk/publications/docs/SLOTSReport202306.pdf*

Institute for Health Policy, April 2023, "Little change in voting preferences in March, with NPP/JVP maintaining a clear lead over SJB, amidst possible signs of a UNP rise. IHP MRP General Election voting intentions update March 2023", IHP Press Release #2023-11.
*Available at: https://ihp.lk/news/pres_doc/IHPPressRelease20230419.pdf*

Institute for Health Policy, May 2023, "NPP/JVP maintains a lead, but loses support to UNP and other parties, whilst SJB flatlines. IHP MRP General Election voting intentions update April 2023", IHP Press Release #2023-15.
*Available at: https://ihp.lk/news/pres_doc/IHPPressRelease20230525.pdf*

**IHP பற்றி**

IHP கொழும்பு, இலங்கையில் உள்ள சுயாதீனமான மற்றும் கட்சிசார்பற்ற ஆய்வு மையம். SLOTS ஆய்வின் பிரதான ஆய்வாளர் மருத்துவர் ரவி ரன்னன்-எலிய ஆவார். இவர் பொது கருத்துக்கணிபுகளில் ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தில் பயிற்சி பெற்றதோடு மூன்று தசாப்தங்களாக பல்வேறு ஆய்வுகளை நடத்திவருகிறார்.

**முறை**

முன்தேர்வு இல்லாமல் எழுமாற்றமாக தேர்ந்தெடுத்த கைப்பேசி எண்களின் மூலம் தொடர்புகொண்டு சேர்க்கப்பட்ட வயதுவந்தவர்களின் (18 வயதிற்கு மேற்பட்டவர்கள்) மாதிரியில் இருந்தும் மற்றும் எழுமாற்ற மாதிரி தெரிவு முறையின் மூலம் முறைப்படி தெரிவு செய்யப்பட்ட ஒர் தேசிய பதிலளிப்பவர் பேனலிலிருந்தும் நேர்காணல்களை SLOTS ஒருங்கிணைக்கிறது. வாக்களிப்பு தீர்மானத்தை Multilevel Regression and Post-Stratification (MRP) தழுவிய முறை கொண்டு IHP மதிப்பீடு செய்தது. உடன் தொடர்பு முறையின் நிச்சயமற்ற தன்மையை மதிப்பிட, multiple imputation என்னும் தரவு கணிப்புமுறையை பயன்படுத்துவதோடு, குறிப்பிட்ட மாதத்தில் வாக்களிப்பதை மதிப்பீடு செய்ய அனைத்து SLOTS நேர்காணல்களின் தரவினையும் முழுமையாக பயன்படுத்துகிறது. இம்பியூடேஷன் (Imputation) என்பது தவறிய, தவறான அல்லது சீரற்ற தரவுகளுக்கு மாற்று மதிப்புகளை ஒதுக்கப் பயன்படும் செயல்முறையாகும்.

2023 மே மாததிற்கான MRP மதிப்பீடுகள் மே 2023 ல் நடத்தப்பட்ட 630 நேர்காணல்கள் மற்றும் ஆகஸ்ட் 31 2021 - ஜூன் 19 2023 வரை நடத்தப்ட்ட 11,897 நேர்காணல்களின் மொத்தத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட்டது. பிழை விளிம்பு என்.பி.பி./ஜே.வி.பி., எஸ்.ஜே.பி., யூ.என்.பி. மற்றும் எஸ்.எல்.எப்.பி., ஆகிய கட்சிகளுக்கு 3–5% என்றும் மற்ற கட்சிகளுக்கு 1–3% என்றும்

மதிப்பிடப்பட்டது. இந்த மே புதுபிப்பு முந்தைய பதிவைவிட சமீபத்திய தரவினை பயன்படுத்துவதால் முந்தைய மாதங்களுக்கான வாக்கு பங்கு மதிப்பீட்டில் சிறிய மாற்றங்கள் உள்ளன. stochastic simulation என்னும் உருவகப்படுத்துதல் முறை பயன்படுத்தப்பட்டது. உருவகப்படுத்துதல் 30 இல் இருந்து 100க்கு அதிகரிக்கபட்டதனால் வாக்காளர் பங்கின் மதிப்பீடு மற்றும் பிழை விழிம்பின் மதிப்பீட்டின் துள்ளியம் சிறிதளவு மேம்பட்டது.

MRP என்பது மற்ற நாடுகளில் உள்ள வாக்கெடுப்பு நிறுவனங்களால் சிறிய கூறுகளை முழுமையாக பயன்படுத்துவதற்கு அதிகமாக உபயோகப்படுத்தப்படும் ஒரு முறையாகும். குறிப்பாக YouGov, UK Brexit வாக்கெடுப்பு மற்றும் சமீபத்திய UK பொதுத் தேர்தல்களின் முடிவுகளை முன்னறிவிக்கப் பயன்படுத்தியது. தேசிய சனத்தொகையின் வயது, பாலினம், இனக்குழு, பொருளாதார நிலை, கல்வி, இடம், மற்றும் 2019 ஜனாதிபதி மற்றும் 2020 பொது தேர்தல் வாக்களிப்போடு மாதிரி பொருந்துமாறு அனைத்து மதிப்பீடுகளும் சரிசெய்யப்பட்டன.

## நிதியுதவி

இலங்கையில் நீலன் திருச்செல்வம் அறக்கட்டளை, ஐக்கிய ராஜியத்தின் உடல்நலம் மற்றும் பராமரிப்பு ஆராய்ச்சிக்கான தேசிய நிறுவனம் (UK NIHR) ஆசியா மன்றம்(The Asia Foundation) மற்றும் ஏனையோர் SLOTS ஆய்விற்கு நிதியுதவி அளித்துள்ளனர். ஆனால் ஆய்வின் வடிவமைப்பிலோ, பகுப்பாய்விலோ மற்றும் கண்டுபிடிப்புகளின் பொருள்விளக்கத்திலோ ஆதரவாளர்கள் பங்கு வகிக்கவில்லை. மேலும் விவரமான தரவுகள் மற்றும் முடிவுகளை பெற விரும்பும் நபர்கள் IHP உடன் தொடர்பு கொள்ளலாம்.